2014 ஜூலை 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விதிகளை நான் முன்னரே படித்துக் காட்டிவிட்டேன். உங்கள் கட்சி உறுப்பினர் திரு. லாசர் விளக்கமாக எல்லாவற்றையும் பேசிவிட்டார். மாண்புமிகு அமைச்சரும் பதில் அளித்துவிட்டார். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்விலே மாண்புமிகு அமைச்சர் பதிலளித்ததற்குப் பின்னாலே, அதன்மீது விளக்கங்களைக் கேட்கக்கூடாது; இதுதான் விதி. மீண்டும் நீங்கள் எழுந்து பேசுவது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன, திரு. சந்திரகுமார்?

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Discussison ஒன்றும் இல்லை. திரு. சந்திரகுமார், நீங்கள் பேசியது அவைக் குறிப்பில் ஏறாது. இது discussion இல்லை. (குறுக்கீடுகள்) இது தீர்மானமும் இல்லை. (குறுக்கீடுகள்) இது முறையில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) திரு. பாலகிருஷ்ணன், உட்காருங்கள். இது விவாதம் இல்லை, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) திரு. பாலகிருஷ்ணன், நீங்கள் உட்காருங்கள். நான் பேசிவிடுகிறேன். கவன ஈர்ப்பு எடுக்கப்பட்டு, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் பேசி முடித்துவிட்ட பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான பதிலுரையைச் சொன்னதற்குப் பின்னால், இதில் விவாதத்திற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடுகள்)

திரு. பி.ஜி. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்கள் செய்ததை நியாயப்படுத்துகிறீர்களா? (குறுக்கீடுகள்) அந்த நடைமுறை சரியா? (குறுக்கீடுகள்) என் இடத்தில் நீங்கள் இருந்து பார்த்தால்தான் தெரியும். இப்படிச் செய்தால் நான் சபையை நடத்த முடியுமா? (குறுக்கீடுகள்) சபையை நடத்த முடியுமா? நான் என்ன செய்ய முடியும்? அவர்களின்* leaders *சொன்ன பிறகாவது அவர்கள் இடத்திற்குப் போக வேண்டும் இல்லையா? இடத்திற்குப் போகவில்லை என்றால், நான் எப்படி அவையைத் தொடர்ந்து நடத்த முடியும்? (குறுக்கீடுகள்) பிறகு நான் எப்படி அவையை நடத்துவது? (குறுக்கீடுகள்) இது முறையா? (குறுக்கீடுகள்) இது முறையில்லை என்று சொல்கிறீர்கள், ஆனால் பரிந்துரை பண்ணுகிறீர்களே? (குறுக்கீடுகள்) இல்லை, முறையில்லை என்று சொல்கிறீர்கள், பிறகு பரிந்துரை செய்கிறீர்களே? (குறுக்கீடுகள்) இது முறை இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. அதை எப்படி மறுபரிசீலனை செய்வது? (குறுக்கீடுகள்) எப்படி மறுபரிசீலனை செய்யச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) தினமும் அவர்கள் வந்து இப்படித்தான் செய்துவிட்டுப் போகிறார்கள். (குறுக்கீடுகள்) எப்படி நான் மறுபரிசீலனை செய்ய முடியும்? உட்காருங்கள், எப்படி மறுபரிசீலனை செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) நான் எப்படி சபையை நடத்துவது? அவர்கள் இப்படி முறையில்லாமல் செய்வது எப்படிச் சரியாக இருக்கும்? (குறுக்கீடுகள்) அவர்கள் என்னுடைய வேண்டுகோளை செவிமடுக்கவில்லை. மாண்புமிகு பேரவை முன்னவரையும் பேச விடவில்லை. யாரையும் பேச விடவில்லை. இப்படி முறையில்லாமல் செய்வது எப்படிச் சரியாக இருக்கும்? திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள்.*

4. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாரும் எல்லாமும் பெற்று வளமாக வாழ வேண்டும் என்ற உயரிய இலட்சியத்தோடும், அனைத்துத் துறைகளும் சிறந்த கட்டமைப்புகளைப் பெற்று எல்லா வகைகளிலும் முதன்மையான மாநிலமாக விளங்க வேண்டும் என்ற நோக்கத்தோடும், தொலைநோக்குத் திட்டம் 2023–ஐக் கொண்டு வந்து, தீவிரமாகச் செயல்படுத்திவரும் மக்களின் நலன் காக்கும் மகராசி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

2014 ஜூலை 22] [திரு. பி.ஜி. நாராயணன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினாறாவது முதல் நூற்று முப்பதாவது வரையிலான 15 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

பிற்பகல் 12–10

5. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014–2015 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிரிலே கலந்து, ஏழுரைக் கோடி தமிழர்களின் உள்ளத்தில் நிறைந்த எங்களின் சாதனைத் தாய், தமிழக மக்களுக்கு நிறைவான வாழ்வை விரைவாகத் தந்த வீரத்தாய், அரைத்தாலும் மணம் கொடுப்பது சந்தனம், உருகினாலும் ஒளி கொடுப்பது மெழுகுவர்த்தி. தமிழக மக்களுக்கு மணம் கொடுக்கும் சந்தனமாக, ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்தியாக வாழ்ந்துகொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1556, திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3241, திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2296, திரு. பி.வி. கதிரவன்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3382, திரு. அ. கணேஷ்குமார்.